# BRAMPTON Service and Information Update

## கோவிட்-19 தொற்றுக்கு எதிராக முகக் கவசம் அணிவது கட்டாயம் எனும் தனது உபசட்டத்தை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நீட்டிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 1, 2021) – பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் அறிவுரையைப் பின்பற்றி கோவிட்-19 தொற்றுக்கு எதிராக முகக் கவசம் அணிவது கட்டாயம் எனும் உப சட்டத்தை ஏப்ரல் 1, 2022 வரை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நீட்டிக்கிறது.

கோவிட்-19 தொற்றுக்கு முகக் கவசம் அணிவது கட்டாயம் எனும் உபசட்டத்தின் கீழாக, அனைத்து பொதுக்கட்டிடங்களுக்கு உள்ளாக, மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிவது கட்டாயமாகும். ஸ்கார்ஃப்-கள், பந்தனா-க்கள் கழுத்தில் அணியும் துணிகள் அல்லது கழுத்திற்கு வெப்பம் தரும் துணிகள் மற்றும் வெளிவிடும் முச்சு செல்வதற்கான துளை கொண்ட  முகக் கவசங்கள் ஆகியவை, முகக் கவசமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், இந்த உபசட்டத்தின்படி, உணவு சாப்பிட மற்றும் பானம் அருந்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே எந்த  ஒரு தனி நபரும் முகக் கவசத்தை அகற்றலாம்.

தொற்று பரவலைத் தடுப்பதற்காக, குடியிருப்பு வாசிகள் சமூக விலகலைக் கடைப்பிடித்து, நல்ல சுகாதார பழங்கங்களைக் கடைப்பிடித்து, மற்றும் முக கவசம் அணிந்து  தங்கள் வகையில் பங்களிப்பு செய்து வருவதற்காக அவர்களுக்கு நகர நிர்வாகம்  நன்றி கூறிக்கொள்கிறது.

மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிவது மற்றும் தனிநபர் கவச உடை (Personal Protective Equipment (PPE)) அணிவது பற்றி மேலும் அறிய, வருகை புரியவும் www.peelregion.ca.

வணிகங்கள் மற்றும் கட்டிட வசதி செய்துகொடுப்பவர்களுக்கான கூடுதல் தகவல்கள் மற்றும் ஆதாரவளங்கள் www.brampton.ca/masks எனும் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

கோவிட்-19 தொற்று எதிர்கொள்ளுதல் பற்றிய நகரின் மிக சமீபத்திய புதிய தகவல்களுக்கு  வருகை புரியவும்: www.brampton.ca/covid19.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca